RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.34256/ijot2123

# கிறிஸ்தவ சமயக் கொள்கைகளின் தனித்தன்மை

ர. செல்வலதா [அ,*]

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி- 628002, தமிழ்நாடு, இந்தியா.

# The uniqueness in the Principles of Christianity

**R. Selvalatha [a,*]**

[a] Department of Tamil, A.P.C. Mahalaxmi College for Women, Thoothukudi-628002, Tamil Nadu, India
*Corresponding author Email: selvalathar@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2123
Received: 08-04-2021; Revised: 24-05-2021; Accepted: 26-05-2021; Published: 30-05-2021

**Abstract:** The Bible, the holy book of Christians, consists of two parts, the Old Testament and the New Testament. In the Old Testament, wrongdoers bled to get rid of it by sacrificing sheep, cattle and birds. They thought that their sins were being relieved by the bleeding. During the New Testament, Jesus came to human beings and taught people the order of life and the way to seek God by living with man. He made people realize their crimes. He bled himself to death to get rid of it. Salvation is the relief from sin by Jesus' blood. On the third day he rose alive and recorded his marvellous event in the history of the world. It is the belief of Christians in godliness that Jesus will come back to the world for the second time, judge people according to their actions and take those who live pure life according to their principles to heaven. The purpose of this study is to express these views.

**Keywords:** Bible, Christian literature, Jesus, Christians.

---

## முன்னுரை

கிறிஸ்தவர்களின் மறைநூலான வேதாகமம் தேவன் பேசிய வார்த்தை என்று கூறப்படுகிறது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலநிகழ்வுகள் பழைய ஏற்பாடு என்றும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வளர்ப்பு, போதனைகள், பாடுகள் மரித்து உயிர்த்தெழுந்த வரலாறு பற்றிய செய்திகள் அடங்கியது புதிய ஏற்பாடு என்றும் இரண்டு வகையாக அமைந்துள்ளது. கி.மு.100 ஆண்டுகளுக்கு முந்தையது என்பர். இதன் மையப் பொருள் கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு என்பதாகும். இதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மறைநூல் விளக்கம்

“பிப்ளோஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்ட சொல்லே விவிலியம் என்ற சொல் ஆகும். ஆங்கிலத்தில் இது ‘பைபிள்’ என்று குறிப்பிடப்படுகிறது”. வேதாகமம் என்பது “கடவுள் மனிதனுக்குத் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதன் பதிவேடு” என்று கூறப்பட்டுள்ளது.

விவிலியம், பைபிள், வேதாகமம், திருமறை என்று பல பெயர்களில் இப்புனிதநூலை அழைத்தனர் (William Barclay, 1981).

## இறைவன் விளக்கம்

வேதாகமத்தின் அடிப்படையில் கடவுள் ஒருவரே. அந்த ஒருவரில் மூவர் அடங்குவர். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று சொல்லப்படுகின்ற இறைத்தன்மையானது. ஆதியில் பிதா என்றும், இயேசுகிறிஸ்துவின் காலத்தில் குமாரன் என்றும், கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின் பரிசுத்தர் ஆவி என்றும் அழைக்கப்படுகிறது. இந்து சமயத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று தொழிலின் அடிப்படையில் மூன்று பரிமாணங்களில் இறைவன் ஒருவனாகத் தம் சக்தியை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இக்கருத்தையே திருமூலர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கூறுகிறார். இஸ்லாம் சமயமும் 'இறைவன் ஒருவனே அவனே அல்லஹ்' என்று கூறுகிறது. (குர். ஆன் 2:163) நபி என்ற இறைத்தூதர் வழி அல்லாஹ் செயல்படுவதை அறியலாம்.

அன்பே பிரதானம் என்று கிறிஸ்தவமும், அன்பே சிவம் என்று இந்துசமயமும், மானிட சகோதரத்துவமே இஸ்லாத்தின் குறிக்கோள் என்று இஸ்லாம் சமயமும் உணர்த்துகின்றன. இறைவன் ஒருவனே என்றும் அன்பின் வழி இறைவனை அடையாலம் என்று சமயங்கள் கூறுகினறன.

## கிறிஸ்தவ சமயக்கொள்கைகள்: (பழைய ஏற்பாட்டுக் கற்பனைகள்)

கர்த்தர் சீனாய்மலையில் மோசேயிடம் பேசியதை அவன் மக்களிடம் தெரிவித்தான்.

- உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து; தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன்தேவனாகிய கர்த்தர் நானே.
- என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
- ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.
- நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்.
- என்னிடத்தில் அன்புகூர்ந்து என்கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.
- உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.
- ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.
- ஆறுநாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக, ஏழாம்நாளோ உன்தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அதிலே நீயானாலும் உன் குமாரனானாலும்... யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.
- கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்.
- உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன்தகப்பனையும் உன்தாயையும் கனம்பண்ணுவாயாக.
- கொலை செய்யாதிருப்பாயாக.
- விபசாரம் செய்யாதிருப்பாயாக.
- களவு செய்யாதிருப்பாயாக
- பிறனுக்கு விரோதமாய் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக
- பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக.
- நீங்கள் வெள்ளி, பொன்னினால் தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்க வேண்டாம்.
- மண்ணினால் பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி அதின்மேல் உன் ஆடுகளையும் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசிர்வதிப்பேன்.
- எனக்கு கல்லினால் பலிபீடத்தை உண்டாக்கவேண்டாம்.

- என் பலிபீடத்தின்மேல் உன்நிர்வாணம் காணப்படாதபடிக்கு படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம். (யாத்திராகமம், 20ம் அதிகாரம்) இது பழைய ஏற்பாட்டுக்கால கற்பனைகள். மக்கள் இதன்படி வாழவேண்டும் என்று தேவன் வழங்கியவை.

## புதிய ஏற்பாட்டின் கற்பனைகள்

இஸ்ரவேல் கேள் என்று இயேசு கூறியது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன்முழு இருதயத்தோடும் உன்முழு ஆத்துமாவோடும் உன்முழு மனதோடும் உன்முழுப் பலத்தோடும் அன்புகூறுவாயாக என்பதே பிரதான கற்பனை.

உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல் பிறனிடத்தில் அன்புகூறுவாயாக என்பதே இவைகளிலும் பெரியகற்பனை வேறொன்றுமில்லை" (மாற்கு 12:30,31) வேதத்தின் அடிப்படை அன்புதான். இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். அதுதான் இறைவழிபாடு. "தெய்வத்திற்கும் மனிதனுக்கும் உள்ள நேரடி உறவுதான் வழிபாடு" இந்த வழிபாட்டின் வழியாக இறை அருளைப் பெற்றுக்கொள்ளலாம் (Seranthaiyah, 2021). ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் தான் அன்புகூறும்போது தன்னை உணர்வான். "தன் நிலை அறியும் போதுதான் அவனிடத்தில் காணக்கூடிய நிறை குறைகளை உணரமுடியும்." (ஆ. பா, ப.94) பிறர்துன்பத்தை நீக்க முயல்வதும் உதவிசெய்வதும் அன்பினால் நடைபெறுகிறது. "பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் பார்த்தபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் அத்துன்பத்தை நீக்க முயல்வதே சீவகாருணிய ஒழுக்கமாகும், இதனையே கருணை என்று வள்ளலார் குறிப்பிடுவார். பிறஉயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தை நீக்க பயன்கருதாது முயல்கின்றபோது ஏற்படும் உயிரிரக்கமே அருளாகும்.

அருள் உண்டானால் அன்பு உண்hகும்.

அன்பு உண்டானால் சிவானுபவம் உண்டாகும்

அன்பு, இரக்கம், கருணை, சமாதானம், உதவிசெய்தல் போன்ற நல்ல குணங்கள் எல்லாம் அன்பினால் மட்டுமே ஏற்படும் என்பதை அறியலாம் (Saravananandha, 1990).

## தனித்தன்மை

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களை சிநிNகியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் (மத்தேயு 6:44இ45)

கிறிஸ்தவ சமயத்தின் தனித்துவம் இதுவாகும்.

சத்துருக்களை - சிநேகிப்பதும்

சபிக்கிறவர்களை - ஆசிர்வதிப்பதும்

பகைக்கிறவர்களுக்கு - நன்மைசெய்வதும்

நிந்திக்கிறவர்களுக்கு - நன்மைசெய்வதும்.

நிந்திக்கிறவர்கள், துன்பப்படுகிறவர்களுக்கு - இறைவனிடம் வேண்டுதல் செய்வதும்

ஒரு மனிதனால் இயலாத ஒன்றாகும். ஆனால் அந்தமனிதன் இறை அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு இறைவன் விதித்த இப்படிப்பட்ட கொள்கைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அவனால் இவ்வாறு நடந்துகொள்ள முடியும். இறைவனின் புத்திரனாகலாம். "அன்பும் சகிப்புத்தன்மையும் கொண்டதே உண்மையான மதம். என் மதத்திற்கு எல்லை ஏதும்இல்லை உண்மை மற்றும் சர்த்வீகத்தை அடிப்படையாகக் கொண்டதே என்மதம் எவரையும் வெறுக்கக்கூடாது என்கிறது என்மதம். மக்களைப் பிரிப்பதற்கல்ல மதம். அனைவரையும் பிணைக்கவே மதம்". என்று மதத்தின்

சாராம்சத்தை அன்பும் அதனடிப்படையில் சகிப்புத்தன்மையும் என்று கூறுகிறார் காந்தியடிகள் (Kalyana Sundaranar, 2004).

இந்த உலகம் நிலையில்லாதது. வாழ்க்கை நிலை இல்லாதது. இந்த உடல் உயிர் எதுவுமே நிலையானது அன்று. நிலைத்த ஒன்று இறைவன் மட்டுமே. அந்த இறைவன் தூயவர் அவரிடம் செல்ல வேண்டிய மனிதஆன்மா பாவத்துடன் போக முடியாது. "பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனே இரக்கம்பெறுவான்" . என்று வேதம் கூறுகிறது. "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1யோவான் 1:7-9)

இயேசுவின் இரத்தம் மட்டுமே ஒரு மனிதனைப் பாவத்திலிருந்து விடுவிக்க முடியும் என்பது கிறிஸ்தவசமயத்தின் நம்பிக்கை. பாவமில்லாதவனே பரலோகம் செல்லமுடியும் அதுவே நித்திய, நிலையான வாழ்வு. அதை அடையவே மனிதன் இந்தஉலகத்தில் பாவமில்லாத தூயவாழ்வு வாழவேண்டும் என்று கூறப்படுகிறது.

அந்த நித்யவாழ்வை எல்லோரும் அடையவேண்டும் என்பதற்காக இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசித்த (நம்புதல்) ஒருவன் பிறருக்கு உபதேசம் (சுவிசேஷம்) பண்ணுகிறான். பிறரை இறைவன்பால் ஆற்றுப்படுத்துகிறான். "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மாற்கு 28: 20) "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைகளுக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். (மத்தேயு 16:26இ27) இயேசு மீண்டும் மனிதர்களை நியாயம் விசரிக்க வருவார் என்ற நம்பிக்கை கிறிஸ்தவ மக்களிடம் உள்ளது.

## முடிவுரை

வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் அனைத்து மனிதர்களும் தம்வாழ்நாளில் கடைபிடித்து வாழ்வதற்காக அருளப்பட்டவை.

பிறப்புமுதல் இறப்புவரை மட்டுமல்ல இறப்பிற்கு பின்பும் இறைவனோடு வாழ்வதற்குரிய வாழ்க்கையைக் கூறுகிறது.

அந்த மறுமை வாழ்விற்குச் செல்ல இந்த உலகவாழ்வில் எப்படி வாழவேண்டும் என்று சிறந்த வாழ்விற்கான ஒழுங்குமுறைகளை கற்பனை, கட்டளை, பிரமாணங்களாக எடுத்துக் கூறுகிறது. அதைக் கடைபிடித்து வாழ்ந்தால் அறவாழ்க்கை வாழலாம்.

இறைவனின் துணையுடன் பக்தியுள்ள, பரிசுத்த வாழ்வு வாழும்போது 'பரலோகம்' என்ற இறைவனோடு வாழக்கூடிய நித்திய வாழ்வை அடையலாம் என்று வேதம் கூறுகிறது. இதன்மூலம் கிறிஸ்தவ சமயக் கொள்கைகள் தனித்துவம் பெற்றது என்பதை அறியமுடிகிறது.

## References

Kalyana Sundaranar, V., (2004) Human Life and Gandhiji, Poompuhar Publishing House, Chennai, India
Saravananandha, (1990) Thiruvarutpa, Ramalingar Panimandram, Chennai, India
Seranthaiyah, V., (2021) Aanmeega Padhaiyiley, Chennai, India.
William Barclay, (1981) The Daily Study Bible, The Gospel at mathew, Vol. I, Chapters 1-10, Theological Publication in India, Bangalore

### Acknowledgement

Nil

### Funding

This study was not funded by any grant

### Conflict of interest

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

### About the License

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

R Selvalatha, The uniqueness in the Principles of Christianity, Indian Journal of Tamil, 2(2) (2021) 18-22. https://doi.org/10.34256/ijot2123